[பேரவைத் தலைவர்] [2021 பிப்ரவரி 3

எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படுபவருமான திரு. எஸ்.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் 25–9–2020 அன்று உடல்நலக் குறைவால் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

திரு. எஸ்.பி.பி. அவர்கள் 16–க்கும் மேற்பட்ட மொழிகளில் 40 ஆயிரத்திற்கும் அதிகமான பாடல்களைப் பாடி கின்னஸ் சாதனை படைத்தவர். கலைமாமணி விருது, தேசிய விருது, பல மாநில விருதுகள், இந்திய அரசின் பத்மபூஷன் மற்றும் பத்மஸ்ரீ போன்ற விருதுகளைப் பெற்றவர். மேலும், இந்த ஆண்டின் பத்மவிபூஷன் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரை உலக நண்பர்களுக்கும், ரசிகப் பெருமக்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

(இ) மருத்துவர் வி. சாந்தா, புற்றுநோயியல் நிபுணர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உலகப் புகழ்பெற்ற புற்றுநோயியல் நிபுணரும், சென்னை அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தின் தலைவருமான மருத்துவர் வி. சாந்தா அவர்கள் உடல்நலக் குறைவால் 19–1–2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

மருத்துவர் வி. சாந்தா அவர்கள் புற்றுநோய் பாதித்த ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்கவும், புற்றுநோய் தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகள்மூலம் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்டவர்.

இவரது மகத்தான சேவையைப் பாராட்டி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013 ஆம் ஆண்டு இவருக்கு ஔவையார் விருது வழங்கி சிறப்பித்தார்கள். பத்மஸ்ரீ, பத்மபூஷன் மற்றும் பத்மவிபூஷன் ஆகிய உயரிய விருதுகளை மத்திய அரசு இவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளது. மேலும், உலகப் புகழ்பெற்ற மகசேசே விருதும் பெற்ற சிறப்புக்குரியவர்.

2021 பிப்ரவரி 3] [பேரவைத் தலைவர்]

மருத்துவர் வி. சாந்தா அவர்களின் மறைவு, மருத்துவத் துறைக்கும், தமிழ்நாட்டிற்கும் மிகப் பெரிய இழப்பாகும். அன்னாரது மறைவால் அவர்களை இழந்து வாடும் சென்னை அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (4–2–2021), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS